www.Padasalai.Net

www.TrbTnpsc.com

**காஞ்சிபுரம்,** செங்கற்பட்டு, வேலூர் , இராணிப்பேட்டை , நாகப்பட்டினம் மற்றும் தேனி மாவட்டங்கள்

## முதல் திருப்புதல் தேர்வு - 2025

## 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20

| | | |
|---|---|---|
| 1 | ஆ | பணியாளர் |
| 2 | இ | வணிகத் தனித்தன்மை கருத்து |
| 3 | ஈ | ₹. 40,000 |
| 4 | ஆ | குறிப்பேட்டு பக்க எண் |
| 5 | அ | அறிக்கை |
| 6 | இ | அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் |
| 7 | ஈ | சில்லறை ரொக்க ஏடு |
| 8 | அ | ₹. 1,950 வரவு இருப்பு |
| 9 | இ | அனாமத்துக் கணக்கிற்கு |
| 10 | ஈ | அ, ஆ மற்றும் இ |
| 11 | ஆ | வருவாயின வரவு |
| 12 | ஆ | நடப்புச் சொத்து |
| 13 | ஈ | இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும் |
| 14 | ஆ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 15 | ஈ | பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு |
| 16 | இ | வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல் |
| 17 | ஆ | விதிப் பிழை |
| 18 | ஈ | புலனாகாச் சொத்து |
| 19 | ஆ | செயல்பாட்டு மென்பொருள் |
| 20 | ஈ | இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம் |

### பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

**21. கணக்கியலை வரையறு.**

- அமெரிக்க பொதுக்கணக்காளர் சான்று நிறுவனத்தின் கூற்றுபடி, "கணக்கியல் என்பது குறைந்தபட்சம் ஒரு பகுதியாவது நிதியியல் தன்மைகொண்ட மற்றும் பணத்தால் மதிப்பிடக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை, முறையாக பதியும், வகைப்படுத்தும் சுருங்கக்கூறும் மற்றும் அதன் விளைவுகளை தெரிவிக்கும் ஒரு கலையாகும்".



( அல்லது )

- அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

**22. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?**

- அனைத்து முக்கியத் தகவல்களும், நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.
- பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும், உரிமையாளர்களும் வேறுபடுத்தப்பட்டு இருப்பதால், இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.
- நிதி அறிக்கைகளின் வெளிப்பாடு முழுமையானதாகவும், நேர்மையானதாகவும், போதுமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**23. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?**

- நிதிசார்ந்த நடவடிக்கைகளின் உண்மையான சான்றுகளை வெளிப்படுத்தும் ஆவணங்கள், ஆதார ஆவணங்கள் ஆகும்.
- நடவடிக்கை நிகழ்ந்த நாள், அதன் தன்மை, அதில் தொடர்புள்ள நபர்கள் மற்றும் தொகை ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆதார ஆவணங்கள் ஆகும்.

**24. இருப்பாய்வு என்றால் என்ன?**

- இருப்பாய்வு என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கை ஆகும்.

**25. குறிமுறை என்றால் என்ன?**

- குறிமுறை என்பது ஒரு அடையாளகுறி.
- பொதுவாக கணினிமயக் கணக்கியல், கணக்குகளை குறிமுறையாக்குதலை உள்ளடக்கியதாகும்.

**26. மென்பொருள் என்றால் என்ன?**

- வன்பொருள் மற்றும் கணினி அமைப்பின் பயனாளிக்கும் இடையே இடைமுகமாக அமையும் நிரல்களின் தொகுப்பு மென்பொருள் எனக் குறிப்பிடப்படுகிறது.

**27.**

சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 40,000 + ₹. 2,000 = ₹. 42,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{42{,}000 - 0}{5} = \frac{42{,}000}{5} = ₹.\ 8{,}400$$



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

28.

i) விற்பனை கணக்கில் ₹. 100 **வரவு** வைக்க வேண்டும்

ii) கொள்முதல் கணக்கில் ₹. 400 **வரவு** வைக்க வேண்டும்

29

1) பங்காதயம் வங்கியால் பெறப்பட்டது

2) சொந்த பயனுக்காக சரக்குகள் எடுத்தது

30.

விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கசரக்கிருப்பு + கொள்முதல் + நேரடிச் செலவுகள் - இறுதிச் சரக்கிருப்பு

= 10,000 + 80,000 + 7,000 - 15,000

= 97,000 - 15,000

= **₹.82,000**

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

32. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?

(அ) முதலீட்டாளர்கள் (ஆ) அரசு

அ. முதலீட்டாளர்கள்

- ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்
- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பத்து முதலீட்டாளர்களின் இயல்பே.
- எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.

ஆ. அரசு

- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.
- அரசாங்கம் , வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறைச் சார்ந்த





கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.

- மேற்கண்ட காரணத்தாலேயே, அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

33. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஏதேனும் மூன்றினைத் தருக.

1) அதிகப்படியான நிருவுதல் செலவு
2) பயிற்சி அளித்தலின் செலவுகள்
3) வேலையின்மையென அச்சம்
4) பணியில் இடையூறு
5) உடல்நலத்திற்கு இடையூறு
6) அமைப்பு செயலிழத்தல்
7) நேரம் வீணாகுதல்
8) எதிர்பார்க்கப்படாத பிழைகள் தெரிவதில்லை
9) பாதுகாப்பில் தோல்வி

34. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| 3. பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| 4. வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |
| 5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| 6. பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| 7. நிகர இருப்பு | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

35. குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2016 ஜன 1 | ரொக்க க/கு ப<br>முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 10,000 | 10,000 |
| 2 | வங்கி க / கு ப<br>ரொக்க க / கு<br>( வங்கியில் செலுத்தியது ) | | 5,000 | 5,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 1,000 | 1,000 |

36.

1) வெளித்தூக்கு கூலி - பற்று
2) உள் தூக்கு கூலி - பற்று
3) விற்பனை - வரவு
4) கொள்முதல் - பற்று
5) வாராக்கடன் - பற்று
6) வட்டிச் செலுத்தியது - பற்று

37. திரு. ஜெயக்குமார் என்பரது ஏடுகளில் 31.12.2016 ஆம் நாளுக்குரிய வங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 7,130 |
| கூட்டுக:<br>வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது | | 800 |
| | | 7,930 |
| கழிக்க:<br>செலுத்திய காசோலை வசுலாகாதது | | 1,000 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 6,930 |



www.TrbTnpsc.com

38.

1) ஆண்டு தேய்மானத் தொகை = $\frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$

$= \frac{1,00,000 - 10,000}{5} = \frac{90,000}{5}$

ஆண்டு தேய்மானத் தொகை = ₹. 18,000

2) தேய்மான விகிதம் = $\frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$= \frac{18,000}{1,00,000} \times 100 = 18\%$

39. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ₹.1,00,000 | = | ₹.80,000 | + | ₹. 20,000 |
| (ஆ) | ₹.2,00,000 | = | ₹.1,60,000 | + | ₹. 40,000 |
| (இ) | ₹.2,40,000 | = | ₹.1,60,000 | + | ₹.80,000 |

40.

சுரேஷ் அவர்களின் ஏடுகளில்

கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்.வ. இ.எ | பே.ப. எ | தொகை ( ₹ ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 1 | சுமதி | | | | 17,800 |
| 10 | இரகுநாதன் | | | | 10,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 27,800 |

விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெ.செ. இ.எ | பே.ப. எ | தொகை ( ₹ ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 4 | இராணி | | | | 15,200 |
| 21 | சரண்யா | | | | 12,500 |
| | விற்பனை க/கு வ | | | | 27,700 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஸ் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 15,000 | 15,000 |
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 10,000 | 10,000 |
| 14 | கமலேஸ் க/கு ப<br>ரொக்க க/கு<br>( கமலேசுக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 500 | 500 |
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>( ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 4,000 | 4,000 |



www.TrbTnpsc.com

( அல்லது )

41. ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ. எ ண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது. | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

42.அ) கணேசன் என்பவாது ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 அக் 1 | ரொக்க க/கு ப<br>கணேசன் முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 25,000 | 25,000 |
| 5 | வங்கி க / கு ப<br>ரொக்க க/கு<br>(வங்கியில் ரொக்கம் செலுத்தியது) | | 12,500 | 12,500 |
| 10 | அறைகலன் க/கு ப<br>வங்கி க/கு<br>( அறைகலன் வாங்க காசோலை கொடுத்தது ) | | 2,000 | 2,000 |
| 15 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு | | 5,000 | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | ( ரொக்க கொள்முதல் ) | | | 5,000 |
| 19 | வாசு க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடன் விற்பனை ) | | 4,000 | 4,000 |
| 22 | எடுப்புகள் க/கு ப<br>கொள்முதல் க/கு<br>( சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது ) | | 500 | 500 |

## பேரேட்டுக் கணக்குகள்

### ரொக்க கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 1 | கணேசன் முதல் க/கு | | 25,000 | 2017 அக் 15 | வங்கி க/கு | | 12,500 |
| | | | | 15 | கொள்முதல் க/கு | | 5,000 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 7,500 |
| | | | 25,000 | | | | 25,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 7,500 | | | | |

### கணேசன் முதல் கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 அக் 31 | இருப்பு கீ/இ | | 25,000 | 2017 அக் 1 | ரொக்க க/கு | | 25,000 |
| | | | 25,000 | | | | 25,000 |
| | | | | நவ 1 | இருப்பு கீ/ கொ | | 25,000 |

### வங்கி கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 5 | ரொக்க க/கு | | 12,500 | 2017 அக் 10 | அறைகலன் க/கு | | 2,000 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 10,500 |
| | | | 12,500 | | | | 12,500 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 10,500 | | | | |



www.TrbTnpsc.com

### அறைகலன் கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 10 | வங்கி க/கு | | 2,000 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 2,000 |
| | | | 2,000 | | | | 2,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 2,000 | | | | |

### கொள்முதல் கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 15 | ரொக்க க/கு | | 5,000 | 2017 அக் 22 | எடுப்புகள் க/கு | | 500 |
| | | | | 31 | இருப்பு கீ/ இ | | 4,500 |
| | | | 5,000 | | | | 5,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 4,500 | | | | |

### விற்பனை கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 31 | இருப்பு கீ/ இ | | 4,000 | 2017 அக் 19 | வாசு க/கு | | 4,000 |
| | | | 4,000 | | | | 4,000 |
| | | | | நவ 1 | இருப்புகீ/கொ | | 4,000 |

### வாசு கணக்கு

ப — வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 19 | விற்பனை க/கு | | 4,000 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 4,000 |
| | | | 4,000 | | | | 4,000 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 4,000 | | | | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ப **எடுப்புகள் கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017அக் 22 | கொள்முதல் க/கு | | 500 | 2017 அக் 31 | இருப்பு கீ/ இ | | 500 |
| | | | 500 | | | | 500 |
| நவ 1 | இருப்புகீ/கொ | | 500 | | | | |

**( அல்லது )**

42. ஆ)

**காமாட்சி நிறுவன ஏடுகளில் 2018, மார்ச் 31 ஆம் நாளுக்குரிய**
**வங்கி சரிகட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 300 |
| **கூட்டுக**: | | |
| விடுத்த காசோலை இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது | | 1,000 |
| | | 1,300 |
| **கழிக்க**: | | |
| வைப்பு காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 | |
| வங்கியால பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 100 | |
| நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை | 200 | 800 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 500 |

43. அ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள் யாவை?

1) **ஆயத்த மென்பொருள்**
- இவை வணிக நிறுவனங்கள் வாங்கியவுடன் உபயோகப் படுத்தக்கூடிய தரப்படுத்தப்பட்ட அல்லது ஆயத்த தொகுப்புகள் ஆகும்.
- இந்தத் தொகுப்புகள், சிறிய மற்றும் பாரம்பாரிய வியாபார நிறுவனங்களால் பயன் படுத்தப்படுகின்றன.
- நிறுவுதல் மற்றும் பராமாரிப்பு செலவு மிகக் குறைவு.
- Tally, Busy, Marg மற்றும் Profitbooks என்பவை,இவ்வகையிலான மென்பொருளுக்கு சில உதாரணங்களாகும்.

2) **திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்**
- பலசமயங்களில் ஆயத்தமென்பொருள், வணிக நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருந்துவது சாத்தியமில்லை.





- இச்சூழ்நிலைகளில் திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் வணிக நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தியடைவதற்கு உதவியாக இருக்கின்றன.
- திருத்தியமைக்கப்பட்ட மென்பொருளை வணிகமையத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்கலாம்.

**உதாரணமாக**, பணியாளர்களின் வருகையினை பதிவு செய்யும் மென்பொருளை வாடிக்கையாளாரின் தேவைக்கிணங்க, அது பணியாளார்களின் ஒரு மாதத்தின் விடுப்புகளை கணக்கிடவும் செய்திடலாம்.

- இந்தத் தொகுப்புகள் நடுத்தர அல்லது பெரும் வணிக மையங்களால் பயன்படுத்தப் படுகின்றன.

3) **உருவாக்கப்பட்ட மென்பொருள்**
- பெரிய வணிக மையங்கள் தங்களுக்கென்று தனிவழியான செயல்பாட்டைக் கொண்டிருக்கும்.
- பயனுடைய மேலான்மை தகவல் முறைக்கு, சிறிய அல்லது நடுத்தர அளவிலான வணிக மையங்களிலிருந்து தேவைப்படாத, பலதரப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தகவல்கள், பல பயானாளிகளுக்கு அடிக்கடி தேவைப்படுகின்றன.
- அம்மாதிரியான வணிகமையங்களில், அவைகளின் செயல்பாட்டைப் பொருத்து, தேவையின் அடிப்படையிலான மென்பொருளாக, உருவாக்கப்பட்ட தொகுப்புகள் நிறுவப்படுகின்றன.

**( அல்லது )**

43. ஆ)

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ | முதல் | ஆள்சார் கணக்கு |
| ஆ | கட்டடம் | சொத்து கணக்கு |
| இ | உள் ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| ஈ | ரொக்கம் | சொத்து கணக்கு |
| உ | தள்ளுபடிப் பெற்றது | பெயரளவு கணக்கு |
| ஊ | வங்கி | ஆள்சார் கணக்கு |
| எ | கொள்முதல் | பெயரளவு கணக்கு / சொத்து கணக்கு |
| ஏ | சந்துரு | ஆள்சார் கணக்கு |
| ஐ | கொடுபடவேண்டிய கூலி | ஆள்சார் கணக்கு / பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

44. அ)

**ரவிச்சந்திரன் ஏடுகளில் 31. 12. 2016 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 1,50,000 |
| 2 | கடனாளிகள் | | 22,800 | |
| 3 | பெற்ற வாடகை | | | 500 |
| 4 | வங்கி மேல்வரைப்பற்று | | | 3,100 |
| 5 | கடனீந்தோர் | | | 5,500 |
| 6 | வளாகம் | | 1,46,000 | |
| 7 | தொடக்கச் சரக்கிருப்பு | | 10,000 | |
| 8 | கொள்முதல் | | 45,000 | |
| 9 | விற்பனை | | | 75,000 |
| 10 | விற்பனைத் திருப்பம் | | 1,000 | |
| 11 | அளித்த தள்ளுபடி | | 800 | |
| 12 | பெற்றத் தள்ளுபடி | | | 1,000 |
| 13 | கூலி | | 2,900 | |
| 14 | சம்பளம் | | 3,500 | |
| 15 | கழிவு கொடுத்தது | | 1,100 | |
| 16 | பொதுச் செலவுகள் | | 2,000 | |
| | மொத்தம் | | 2,35,100 | 2,35,100 |

( அல்லது )

44. ஆ)

**விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லத்து நட்டம் கணக்கிடுதல்**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| கனரக வாகனத்தின் விலை | 8,00,000 |
| **கழிக்க** : தேய்மானம் ( 1.10.2014 முதல் 31.3.2015 வரை ) ( 8,00,000 × 15/100 × 6/12 ) | 60,000 |
| | 7,40,000 |
| **கழிக்க** : தேய்மானம் (1.4.2015 முதல் 31.3.2016 வரை ) ( 7,40,000 × 15/100 ) | 1,11,000 |
| | 6,29,000 |
| **கழிக்க** : தேய்மானம் ( 1.4.2016 முதல் 31.3.2017 வரை ) ( 6,29,000 × 15/100 ) | 94,350 |
| | 5,34,650 |
| **கழிக்க**: விற்ற விலை | 5,00,000 |
| விற்றதில் நட்டம் | 34,650 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.TrbTnpsc.com

45. அ) **இராணியின் ஏடுகளில்கணக்கியல் சமன்பாடு**

| வ. எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | அறைகலன் ₹. | = | முதல் ₹. | பொறுப்புகள் கடனீந்தோர் ₹. |
| 1 | ரொக்கத்துடன் தொழில்தொடங்கியது | + 80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| | சமன்பாடு | +80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| 2 | கடனுக்கு சரக்கு வாங்கியது | 0 | +10,000 | 0 | = | 0 | +10,000 |
| | சமன்பாடு | +80,000 | +10,000 | 0 | = | + 80,000 | +10,000 |
| 3 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | - 6,000 | 0 | +6,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +74,000 | +10,000 | +6,000 | = | + 80,000 | +10,000 |
| 4 | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | - 8,000 | 0 | 0 | = | 0 | - 8,000 |
| | சமன்பாடு | +66,000 | +10,000 | +6,000 | = | + 80,000 | +2,000 |
| 5 | ரொக்கக் கொள்முதல் | - 2,000 | +2,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +64,000 | +12,000 | +6,000 | = | + 80,000 | + 2,000 |
| 6 | வாடகை ரொக்கமாக செலுத்தியது | - 500 | 0 | 0 | = | - 500 | 0 |
| | சமன்பாடு | +63,500 | +12,000 | +6,000 | = | + 79,500 | +2,000 |
| | | 81,500 | | | = | 81,500 | |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

45.ஆ)

ப **பாகுப்படுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏடு** வ

| பெற்ற தொகை ₹ | ரொ.எ.ப.எண் | நாள் | விவரம் | சா.சீ.எண் | மொத்த செலவழித்த தொகை | பயணச்செலவுகள் | வண்டிக் கட்டணம் / கூலி | அஞ்சல் செலவு | எழுது பொருள் | பல்வகைச் செலவுகள் | பே.ப. எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2017 ஜன | | | | | | | | | |
| 500 | | 1 | ரொக்கம் | | | | | | | | |
| | | 2 | பயணச் செலவு | | 5 | 5 | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 12 | | 12 | | | | |
| | | 3 | அஞ்சல் செலவு | | 15 | | | 15 | | | |
| | | | கூலி | | 66 | | 66 | | | | |
| | | 4 | எழுதுபொருள் | | 134 | | | | 134 | | |
| | | | போக்குவரத்து செலவு | | 18 | 18 | | | | | |
| | | 5 | பழுதுபார்ப்புச் செலவு | | 65 | | | | | 65 | |
| | | | பயணச் செலவுகள் | | 11 | 11 | | | | | |
| | | | வண்டிக் கட்டணம் | | 24 | | 24 | | | | |
| | | | | | 350 | 34 | 102 | 15 | 134 | 65 | |
| | | 5 | இருப்பு கீ/இ | | 150 | | | | | | |
| 500 | | | | | 500 | | | | | | |
| 150 | | 6 | இருப்பு கீ/கொ | | | | | | | | |
| 350 | | 6 | ரொக்க க/கு | | | | | | | | |





46. அ) **கல்யாண சுந்தரம் என்பவரின் ஏடுகளில்**

**முப்பத்தி ரொக்க ஏடு**

| நாள் | பெறுதல்கள் | இ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | ரொக்கம் | வங்கி | நாள் | செலுத்தல்கள் | சா.சீ.எ | பே.ப.எ | தொகை ₹ தள்ளுபடி | ரொக்கம் | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 42,500 | 35,000 | 2017 ஜன 4 | வங்கி க/கு | | எ | | 11,500 | |
| 3 | விற்பனை க/கு | | | | 15,700 | | 6 | கொள்முதல் க/கு | | | | 14,300 | |
| 4 | ரொக்க க/கு | | எ | | | 11,500 | 10 | பொங்கல் முன்பணம் க/கு | | | | | 17,000 |
| 9 | பங்காதாயம் பெற்றது | | | | | 2,000 | 17 | மகேஷ் க/கு | | | 300 | 19,700 | |
| 12 | நாகராஜன் க/கு | | | 150 | 11,850 | | 20 | எடுப்புகள் க/கு | | | | 20,000 | |
| 30 | வங்கி க/கு | | எ | | 1,500 | | 30 | ரொக்க க/கு | | எ | | | 1,500 |
| | | | | | | | 31 | இருப்பு கீ/இ | | | | 6,050 | 30,000 |
| | | | | 150 | 71,550 | 48,500 | | | | | 300 | 71,550 | 48,500 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | | | 6,050 | 30,000 | | | | | | | |

**( அல்லது )**

46. ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000. | வருவாயினச் செலவு |
| (ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹. 5,000. | வருவாயினச் செலவு |
| (iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹. 2,000. | வருவாயினச் செலவு |
| (iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹. 3,000. | முதலினச் செலவு |
| (v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹. 12,000 | வருவாயினச் செலவு |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

47.அ)

மனோஜ் ஏடுகளில் 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய

ப இலாப நட்டக்கணக்கு வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| சம்பளம் | 5,600 | | மொத்த இலாபம் கீ/கொ | | 25,000 |
| கூட்டுக : கொடுபடவேண்டியது | 400 | 6,000 | பெற்ற தள்ளுபடி | | 300 |
| காப்பீடு | | 200 | பெற்ற கழிவு | 100 | |
| அளித்ததள்ளுபடி | | 400 | கூட்டுக : பெறவேண்டிய கழிவு | 100 | 200 |
| விளம்பரம் | | 450 | | | |
| அச்சு செலவுகள் | | 375 | | | |
| பயணச் செலவுகள் | | 500 | | | |
| எழுதுபொருள் செலவு | | 75 | | | |
| வாடகை | 650 | | | | |
| கழிக்க: முன்கூட்டி செலுத்தியது | 50 | 600 | | | |
| கடன்மீது வட்டி | | 225 | | | |
| பழுதுபார்ப்பு செலவுகள் | | 125 | | | |
| அலுவலகச் செலவுகள் | | 55 | | | |
| பொதுச் செலவுகள் | | 875 | | | |
| தபால் செலவுகள் | | 175 | | | |
| நிகர இலாபம் ( முதல் கணக்கிற்கு மாற்றவேண்டியது ) | | 15,445 | | | |
| | | 25,500 | | | 25,500 |

( அல்லது )

47.ஆ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

1. தேய்வு மற்றும் உராய்வு
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. காலப்போக்கு
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.



3. வழக்கொழிவு
   - நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   உதாரணமாக, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது
   - தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.
5. பராமரிப்பின்மை
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.
6. அசாதாரணமான காரணிகள்
   - தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com